[1996 மே 24

6. தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்படமாட்டாது என்ற மறைந்த பிரதமர் பண்டித நேரு அவர்களின் உறுதிமொழி இருந்தபோதிலும் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்து வருகிற மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரே வழி, மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்தையும் மத்திய அரசின ஆட்சிமொழிகளாக அக்குவது தான் என்பது இந்த அரசின் மொழிக் கொள்கையாகும். அதற்குக் காலம் தேவைப்படுமென்ற வாதம் வைக்கப்படுமேயானால் திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழமையானதும் சிறப்புப் பெற்றதும் இலக்கிய இலக்கண வளம் மிக்கதுமான தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும்.

7. நமது மாநிலத்தில் அனைத்து நிருவாக நடைமுறைகளிலும் குறிப்பிட்ட கால அளவுக்குள் தமிழ் மொழியை முழு அளவில் பயன்படுத்துவதற்கு முனைப்பான பணி மேற்கொள்ளப்படுவதற்கும் "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்ற ஏற்றமிகு நிலையை உருவாக்குவதற்கும் தமிழ் ஆட்சி மொழித் துறை அமைச்சகம் ஒன்று முதல் தடவையாக தனியாகவே அமைக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்: அதே சமயத்தில் மொழிச் சிறுபான்மையினரின் நலன்களுக்கு எந்தக் குந்தகமும் விளையாமல் பாதுகாக்கப்படும் எனவும் உறுதியளிக்கிறேன்.

8. சமயச் சார்பின்மைக் கொள்கையையும் சமுதாய நல்லிணக்கத்தையும் போற்றிப் பேணுகின்ற இந்த அரசு, அனைத்து மதத்தினரும் அனைத்து வகுப்பினரும் ஒரு தாய் மக்கள் என்கிற உணர்வு தோன்றி நீடித்து நிலைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை, விரைந்து செயல்படுத்துவதுடன், தேவைப்படும் பகுதிகளில் எல்லாம் சமூகப் பெரியவர்களையும் அனைத்துக் கட்சி முன்னோடிகளையும் கொண்ட அமைதிக் குழுக்களை அமைத்துப் பணியாற்றும் என்ற உறுதிமொழியை அளிப்பதுடன், அனைத்துத் தரப்பு மக்களும் அதற்கான ஒத்துழைப்பை நல்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

9. 1993-ல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இம்மாநிலத்தில் வேலை வாய்ப்பிலும், கல்வி நிறுவனங்களிலும், 69 சதவீத இடஒதுக்கீட்டைத் தொடருவதற்கு வகை செய்ய சட்டம் ஒன்றை இயற்றியது. அச்சட்டத்தை ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுத்த தமிழகக் கட்சிகள் அனைத்தும் மற்றும் அனைத்திந்தியக் கட்சிகளும் அச்சட்டத்தை அரசியல் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்க ஒத்துழைத்து, அதன் காரணமாக, 1-9-1994-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட 76-ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் வாயிலாக, நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாத வகையில், அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் இது சேர்க்கப்பட்டது. எனினும் 50 சதவீத ஒதுக்கீடு